பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : ஐப்பசி 27உ (13—11—67) திங்கள் வெளியூர் : ஐப்பசி 28உ (14—11—67) செவ்வாய் [இதழ் : 125

டில்லி அரங்கம் :

# யார் இந்த பாட்டீல்?



இன்று துவங்க இருக்கும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரைவிட இந்திய அரசியலின் கவனம், காங்கிரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கான தேர்தல் நாடகத்தில்தான் அதிகம் செல்கிறது!

இது, வருகிற 16-ந்தேதியன்று சூடுபிடித்து, அடுத்த திங்கள் 15-ந்தேதி வரையில், கொதிப்புள்ள நிலையில் இருக்கும்!

நிலைமை கட்டுக்கடங்காமல் போனால் மௌனத்தைக் கடைபிடித்து, அதை ஒரு தந்திரமாக அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கும் காமராசர், வழக்கம்போல் இந்த முறையும் ஏதும் பேசாமல் இருக்கிறார்!

இந்தியத் துணைக்கண்டத்தின் தலையெழுத்தினை மூன்று தடவைகள் மாற்றி எழுதி—இரண்டு பேர்களைத் தலைமையமைச்சராகத் தேர்ந்தெடுத்த அவரது சிறப்புப் பெருமை, எங்கோ ஓடி ஒளிந்து நாட்கள் பல ஆகிவிட்டதாகத்தான் தோன்றுகிறது!

'இனிப்பு' என்று ஏட்டில் எழுதி சுவைப்பதுபோல், அவரை நம்பிக்கொண்டிருக்கும் ஒரு சிலர்தான், இந்தப் பழம்பெருமையினைத் திரும்பத் திரும்பக் கூறி நினைவுபடுத்திக் கொண்டிருக்கின்றனர்!

"ஒருமுறை பதவிக்காலம் நீடிக்கப்பட்டு இந்திய அரசியலின் சரித்திர முக்கியத்துவம் பெறப்போகும் நாட்களில் காமராசர் காங்கிரசின் தலைவராக இருந்தார்" என்ற ஒரு செய்தியினைத் தவிர—தமிழகத்தின் இந்த முன்னாள் முதலமைச்சர்—தனது அடிச்சுவட்டில் விட்டுச்செல்ல வேறு எதனையும் பெற்றிருக்கக் காணோம்!

"கட்சி பல வகைகளிலும் சரிவுபெறக் காரணமாக இருந்தார்—அல்லது, இவர் இருக்கும்போதுதான் இந்த 'அழிவு' நடைபெற்றது" என்று எதிர்காலக் காங்கிரசுக்காரர்கள் கூட அல்ல — இப்போதுள்ள காங்கிரசுக்காரர்கள் – அதுவும் நேருக்குநேர் தூற்றிப்பேசும் அவலநிலைக்கு ஆளான போக்குடன்தான், காங்கிரசில், காமராசரின் தலைமைப் பதவி நாட்கள் எண்ணப்பட்டு வருகின்றன!

பிறந்த மண்ணில் கட்சிப் பெருமை – தனிப்பட்ட திறமை ஆகிய இரண்டையும் அரசியலில் இழந்துவிட்டு, 'வெறுங் கை'யுடன் புதுடில்லிக்குச் சென்றிருக்கும் காமராசரை, காங்கிரசு மேலிடம் 'சட்டை' செய்யவில்லை என்பதனை, தென் சென்னைத் தேர்தல் முடிவுக்குப் பின்னர் இந்தியத் தலைநகர் சம்பவங்களைக் கவனித்து வருபவர்கள் புரிந்துகொள்ளலாம்!

"தமிழகத்தில் கட்சிப் பணிகளைக் கவனிக்கப் போகிறேன்" என்று இரத்தினச் சுருக்கமாகக் கூறிக்கொண்டு காமராசர், சென்னை வந்திறங்கலாம்! இத்தனைக் காலமாக அவரது பெயருக்குப் பின்னால் இருந்த அரசியல் பெருமைகளை, அது ஒன்றுதான் கட்டிக்காக்கும்!

"நீங்கள்தான் இன்னும் ஒருமுறை தொடர்ந்து இருங்களேன்"—என்று நிர்வாகத்தில் இருக்கும் இந்திராவோ, அல்லது

"இன்றுள்ள நிலையில் வேறு எவர் வந்தாலும் வீணான சச்சரவுகள்தான்; எனவே, நீங்களே நீடித்து இருங்கள்" என்று கட்சியின் மேலிடமோ கேட்டுக்கொள்ளாத நிலையில் காமராசர்,

தேர்தலில் கலந்துகொள்பவராகவும் இல்லாமல்—தேர்தலை முன்னின்று நடத்துபவராகவும் தோன்றாமல்—'சந்தேக'த்துக்கு உரியவராகவே காணப்படுகிறார்!

"நானும் போட்டியிடுகிறேன்" என்று பாட்டீல் வெளிப்படையாக அறிவித்த பின்னராவது, "போட்டி இல்லாவிட்டால் தலைவராக நீடிககிறேன்" என்று காமராசர் முன்னரே கூறிய கருத்து, ஒரு முற்றுப்புள்ளியினைப் பெறவேண்டும்!

ஆனால், இந்த நிமிடம் வரையில், 'போட்டி' என்ற பேச்சுக்களில் காமராசரது பெயரும் அடிபடுகிறது!

போட்டியாளராக முதலில் அறிமுகமாகியிருக்கும் 'நந்தா', 'தலைமையமைச்சரின் இசைவு பெற்றவர்' என்பது எந்த அளவு வெளிப்படையாகத் தெரிகிறதோ அந்த அளவுக்கு, 'பாட்டீல் யாருடைய மனிதர்?' என்பது தெரிவிக்கப்படவில்லை; ஆனால், தெரிந்துகொள்ளவேண்டிய ஒன்று!

அமைதி—ஒற்றுமை ஆகிய இரண்டும் ஓரளவுக்கு இருந்தால் கூட, காமராசரோ அல்லது அவருக்கு வேண்டியவரோ கட்சித் தலைமைக்கு வர முடியாது! அந்த அளவுக்குக் காமராசருக்கு எதிராகக் கட்சி நிலைமைகள் வடக்கே வளர்ந்துள்ளன!

ஆனால், குழப்பம்—போட்டி இரண்டும் எல்லைகளை மீறிச்சென்றால், நிலைமைகளின் மன்னராகக் காமராசர்தான் வருவார்!

காமராசர், இந்த இரண்டாவது சாதகத்தைத்தான் பெரிதும் நம்பியிருக்கிறார்!

இதற்கு, ஒரு பலி ஆடாகப் பயன்பட்டிருப்பவர்தான், பாட்டீல்!

**போட்டி இல்லாவிட்டால் பதவியில் நீடிக்க விரும்புவதாகத் தனது கருத்தைக் காமராசர் திரும்பத் திரும்ப விளம்பரப்படுத்துவதன் உள்நோக்கம், உண்மையாகவே ஒரு கட்டுக்கடங்காத போட்டியை உருவாக்கி, பின்னர், அந்த குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கலாம் என்ற தந்திரப் போக்குதான்!**

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

# வ. ஆ. மாவட்டச் சீரணி

## அறிஞர் அண்ணா துவக்கிவைத்தார்

### கல்வியமைச்சர் தலைமையில் விழா

வேலூர், நவ. 12—

2500 தொண்டர்களைக் கொண்ட வ. ஆ. மாவட்ட சீரணியைஇன்று அறிஞர் அண்ணா அவர்கள் துவக்கிவைத்தார்.

கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தலைமையில் இவ் விழா நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பெல்லியப்பா அனைவரையும் வரவேற்றார்.

சட்டமன்றத் துணை அவைத் தலைவர் புலவர் க. கோவிந்தன் சிறப்பு மலரை வெளியிட்டார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் கோதண்டராம செட்டியார், பலராம கவுண்டர், அப்துல் கபூர், திருமதி பார்வதவர்த்தினி ஆகியோர் பேசினர்.

முதலமைச்சர் அண்ணா சீரணியின் அணிவகுப்பைப் பார்வையிட்டார்.

விழா துவங்குமுன் சீரணியினர் நகரின் முக்கிய வீதிகள் வழியே ஊர்வலமாக வந்தனர்.

கடலூர்—சித்தூர் சாலையில் உள்ள ஆரணிச் சாலையை காந்தி சிலை இருக்கும் இடத்திலிருந்து தெற்குப் போலீசு நிலையம் வரை அகலப்படுத்தும் வேலை துவக்கி வைக்கப்பட்டது; இதற்கு ரூ. 2 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், நகரில் ஸ்டேடியம் ஒன்றை அமைக்கும் பணியைச் சீரணியினர் மேற்கொள்வர் என்றும் இதற்கு ரூ. 2 இலட்சம் செலவாகும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்தார்.

## இரா. நெடுஞ்செழியன்

அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் பேசுகையில், 'மருத்துவமனை கட்டிடங்களைக் கட்டுவதற்கும், வேளாண்மைப் பணிகளுக்கும் சீரணி அமைப்பு அவசியம்' என்று குறிப்பிட்டார்.

## அறிஞர் அண்ணா

அறிஞர் அண்ணா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"நமது நாட்டில் ஆள் பலம் நிறைய உள்ளது; ஆனால் அந்த ஆள் பலம் பாழாக்கப்படுகிறது. வீணாகும் ஆள் பலத்தைப் பயன்படுத்திக்கொள்ளத் தமிழ்நாட்டில் சீரணி உதவும்.

இந்தச் சீரணி ஆளுங்கட்சியினால் அமைக்கப்பட்டதல்ல; இது அரசியலுக்கு அப்பாற்பட்டதாகும். இதைப் பற்றி முதலில் மக்களிடையே தவறான கருத்து நிலவியது; இப்போது அந்தக் கருத்து நீங்கி, நல்லாதரவு கிட்டி வருகிறது.

திட்டங்களை நிறைவேற்றத் துரிதமாக நிறைவேற்ற இதுபோன்ற சீரணி மிகவும் தேவையான தாகும்."

# டில்லி அரங்கம்

"நேருவுக்குப் பிறகு இரண்டு முறை தலைமையமைச்சர் தேர்வு நடைபெற்றபோது இருந்த அரசியல் சூடு, இத் தடவை நடைபெறவிருக்கும் அ. இ. காங்கிரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கான தேர்லின்போதும் இருக்கும்" என அரசியல் வட்டாரம் எதிர்பார்க்கிறது!

"இந்தியாவின் முதல்பெரும் கட்சியின் கடைசி நாட்கள்" என்று 1967-க்குப் பின்னர் தோன்றியுள்ள திருப்பங்களை வர்ணிக்கும் அளவுக்குக் காங்கிரசுக் கட்சியின் சரிவு வெளிப்படையாகத் தெரிய ஆரம்பித்திருக்கிறது!

இந்தச் சூழ்நிலையின் துவக்க முதலே காமராசர்—கட்சிக்குத் தலைமை தாங்குவது—தமிழகத்தைப் பொறுத்தவரையில் இரட்டிப்பு முக்கியத்துவம் பெற்றதாக இருக்கிறது!

காங்கிரசின் எதிர்காலம்—காமராசரின் எதிர்காலம் இரண்டினையும் நிர்ணயிக்க இருக்கின்றன—டிசம்பர் 15 வரை இடையில் உள்ள நாட்கள்!

'டில்லி அரங்கம்' அவ்வப்போது அந்த நிலைமைகளை ஆராயும்.

# இல்லாத பள்ளிகள் 260

## அதற்கு அரசு செலவழித்த தொகை ரூ. 60,000!

கடந்த ஆறாண்டுக் காலமாக ஆந்திர அரசு, ரூ. 60,000 மானியமாகத் தந்து கொண்டிருக்கும் 260 பள்ளிக் கூடங்கள், ஏட்டில்தான் இருக்கின்றன— உண்மையில் இல்லை என்ற உண்மை, இப்போதுதான் அந்த அரசுக்குத் தெரியவந்திருக்கிறது.

இந்த உண்மையும், இதற்காகவே அனுப்பப்பட்ட ஓர் ஆய்வு அதிகாரியின் மூலம்தான் அரசுக்குத் தெரியவந்திருக்கிறது!

# மாநகராட்சி கொண்டாடும் நேரு பிறந்த நாள் விழா

## நேரு விளையாட்டு அரங்கில் மாபெரும் குழந்தைகள் அணிவகுப்பு

### அறிஞர் அண்ணா மற்றும் அமைச்சர்கள் பங்கேற்பு

சென்னை, நவ. 13—

பண்டித நேருவின் பிறந்த நாள் விழா, 14—11—67 பிற்பகல் மாநகராட்சி விளையாட்டு அரங்கில் (நேரு ஸ்டேடியத்தில்) நடைபெறும்.

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், 'குழந்தைகள் நாள்' விழா நிகழ்ச்சிகளைத் துவக்கிவைப்பார்.

கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், பொதுப் பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி, மாநகராட்சி மேயர் இரா. சம்பந்தம் ஆகியோர், குழந்தைகள் நாள் விழாவையொட்டிச் சிறப்புரை ஆற்றுவார்கள்.

உள்ளாட்சித்துறை அமைச்சர் மா. முத்துசாமி. விழா மலரை வெளியிடுவார்.

இவ்விழாவினை மாநகராட்சி மன்றமும், குழந்தைகள் நலனுக்கான இந்தியக் கழகமும் சேர்ந்து நடத்துகின்றன.

விழாத் துவக்கத்தில் என்.சி.சி., ஏ.சி.சி. படைகளைச் சேர்நத அணிகள் அணிவகுத்துச் செல்லும்.

அடுத்து, மேயர் இரா. சம்பந்தம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

அடுத்து குழந்தைகள் சார்பில் பள்ளிச் சிறுமியின் வரவேற்புரை நிகழ்ததப்படும்.

இதைத் தொடர்ந்து பள்ளிக் குழந்தைகளின் பல்வேறுவகைக் கூட்டு நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

இந்தியா முழுவதும் நேருவின் பிறந்த நாள், 'குழந்தைகள் நாள்' ஆகக் கொண்டாடப்படுகிறது.

சென்னை மாநகராட்சிப் பள்ளிகளின் பிள்ளைகளும், தனியார் பள்ளிப் பிள்ளைகளும் பல்லாயிரக் கணக்கில் அணிவகுப்பில் பங்கேற்பர்.

குழந்தைகளை நேரு விளையாட்டு அரங்கிற்கு அழைத்துப் போகவும்—திரும்பக் கொண்டுவந்து சேர்க்கவும் தமிழகப் போக்குவரத்துத் துறை, தனிப் பஸ்கள்விட ஏற்பாடு செய்திருக்கிறது.

நம்நாடு
ஆசிரியர்: இரா. செழியன்
திருவள்ளுவராண்டு 1998 ஐப்பசி 27 (13—11—67) திங்கள்

# வெற்றியின் படிப்பினை!

தென் சென்னை இடைத் தேர்தலில் முன்னேற்றக் கழக வேட்பாளரான முரசொலி மாறன் அவர்கள்தான் வெற்றி பெறுவார் என்பது, வாக்குப் பதிவு நடைபெறுவதற்கு முன்னரே தீர்மானிக்கப்பட்ட முடிவாகும். கழகச் சார்புடையவர்கள் இம்முடிவுடன் இருந்தனர் என்பதில்லை; காங்கிரசுப் பெருந்தலைவர்கூட, இம்முடிவைத் தெளிவாகத் தெரிந்துகொண்டுதான் இருந்தார்.

இந்த இடைத் தேர்தலில் பெற வேண்டிய வெற்றியைக் கழகம் பெற்றுவிட்டதைக்கொண்டு, மேற்கண்டவாறு நாம் கூறவில்லை. வாக்குகள் எண்ணப்படுகின்ற நாளன்று காங்கிரசுப் பெரியவர் புதுடில்லிக்குப் பறந்து சென்றுவிட்டதும், எண்ணப்பட்ட இரண்டு இடங்களிலும்—கண்ணுக்கெட்டிய தொலைவில் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் இருவரையாவது காண முடியாமல் போனதும், இத்தேர்தல் முடிவைக் காங்கிரசுப் பெரியவர் உட்படக் காங்கிரசுக் கட்சியினர் முன்கூட்டியே தெளிவாகத் தெரிந்துகொண்டுள்ளனர் என்ற நமது கருத்தை உறுதி செய்கிறது.

வாக்கு எண்ணப்பட்ட இரண்டு இடங்களிலும் கூடியிருந்தவர்களில் ஒருவர்கூட, 'யாருக்கு வெற்றி?' என்ற கேள்வியை எழுப்பவில்லை; 'காங்கிரசு வேட்பாளரைவிடக் கழக வேட்பாளர் பெற்றிருக்கின்ற அதிகப்படியான வாக்குகள் எவ்வளவு?' என்ற கேள்வியைத்தான், தங்களுக்குள்ளாகத் திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டிருந்தனர்; இப்போக்கு எதைக் காட்டுகிறது?—'தேர்தல் முடிவைக் குறித்துப் பொதுமக்கள் ஐயத்திற்கிடமின்றி முன்கூட்டியே தீர்மானித்துக்கொண்டிருந்தனர்' என்ற உண்மையைத்தானே?

இத்தேர்தலில் எப்படியாவது கழகத்தைத் தோற்கடித்து, காங்கிரசுக் கட்சிக்கு வெற்றியைத் தேடிக்கொள்ள வேண்டும் என, காங்கிரசுப் பெரியவர் காமராசர் முழுமூச்சாக முயற்சித்தார்; 'ஆங்கில மொழியை இணை ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளும் ஏற்பாடு, அடுத்த நாடாளுமன்றக் கூட்டத்தில் சட்டமாக நிறைவேற்றப்பட்டுவிடும்' என அவர் பேசிப் பார்த்தார். அப்பேச்சில் வாக்காளர்களுக்கு நம்பிக்கை ஏற்படுவதற்காக, 'மேற்படி சட்டம் நிறைவேற்றப்படாவிட்டால்—காங்கிரசு வேட்பாளர் வெற்றி பெறும் பட்சத்தில்—தமது உறுப்பினர் பதவியை உடனடியாகத் துறந்துவிடுவார்' என்றும் அவர் சொல்லிப்பார்த்தார்.

ஆனால், அவர் பேச்சைத் தென் சென்னை வாக்காளர்கள் செப்பாலடித்த காசு அளவுக்கும் நம்பவில்லை; 'இந்தித் திணிப்பை எதிர்த்துத் தமிழக மக்களின் மொழி நலனைப் பாதுகாக்கக்கூடியவர்கள் கழகத்தவர்தான்' எனத் தாங்கள் கொண்டிருக்கின்ற நம்பிக்கையை, கழக வேட்பாளரை ஆதரித்து வெற்றி பெறச்செய்ததன் மூலம், வாக்காளர்கள் நிலைநாட்டிவிட்டனர்.

இந்த இடைத் தேர்தலில் கழகம் வெற்றி பெற்றதன் விளைவாக, 'கடந்த ஏழு மாதங்களாகக் கழக அரசு செய்திருக்கின்ற பணிகளுக்கு, வாக்காளர்கள் ஒப்புதல் தந்திருக்கின்றனர்' எனக் கொள்ளுவதுதான் நியாயம். சனநாயக முறையில் நடைபெறக்கூடிய இடைத் தேர்தலில் கிடைக்கின்ற முடிவைக் கொண்டுதான் 'அரசு செய்துள்ள பணிகளுக்கு மக்களின் ஆதரவு உள்ளதா இல்லையா' என்பது தீர்மானிக்கப்படும்.

சென்ற பொதுத் தேர்தலில், வாக்குப் பதிவுக்கான நாளுக்கு முன், தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட முடியாத நிலைக்குத் தற்செயலாகக் காங்கிரசுப் பெரியவர் உள்ளானார். அப்படித் தாம் விபத்துக்கு ஆளாகாமல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கும்பட்சத்தில், சென்ற பொதுத் தேர்தலில் 'தோல்வியடைந்திட வேண்டிய கட்டாயம் காங்கிரசுக் கட்சிக்கு ஏற்பட்டிருக்கவே முடியாது' என, காங்கிரசுப் பெரியவருக்கே நம்பிக்கை இருந்தது. காங்கிரசுப் பெரியவருக்கு ஏதோ 'பேராற்றல்' இருக்கிறது என ஆழ்ந்த நம்பிக்கை வைத்திருந்த மற்றவர்களும், 'தேர்தல் பிரச்சாரத்தை மேற்கொள்ள அவரால் முடியாது போனதால், காங்கிரசு தோற்றுவிட்டது' எனப் பீத்திக்கொண்டிருந்தனர்.

காங்கிரசுப் பெரியவர் குறித்துத் தாங்கள் கொண்டிருந்த நினைப்பும் நம்பிக்கையும், 'அடிப்படை இல்லாதது' என்ற உண்மையை, அந்தக் காங்கிரசுப் பெரியவரே முழுப் பொறுப்பும் ஏற்றுக்கொண்டு நடத்திய இந்த இடைத் தேர்தலில்—காங்கிரசுக் கட்சிக்குக் கிடைத்துள்ள தோல்வியிலிருந்து—காங்கிரசுக் கட்சியினர் புரிந்துகொள்ள வேண்டும். தமக்குள்ள திறமை எத்தகையது என்ற உண்மையை, அந்தக் காங்கிரசுப் பெரியவர் உள்ளது உள்ளவாறு உணர்ந்துகொள்ள இந்த இடைத் தேர்தல் முடிவு ஏற்றதோர் படிப்பினையாக அமைந்திருக்கிறது.

இத்தொடர்பில், இந்த இடைத்தேர்தல்பற்றி அறிஞர் அண்ணா அவர்கள் வெளியிட்டிருக்கின்ற கருத்து, ஆழ்ந்த சிந்தனைக்கு உரியது; 'இந்த இடைத் தேர்தல், எனக்கும்—காங்கிரசுத் தலைவர் காமராசர் அவர்களுக்கும் நடைபெறுகின்ற 'பலப் பரீட்சை'யே ஆகும்' என அண்ணா அவர்கள் அறிவித்திருந்தார்கள். அவர் அறிவித்திருந்தபடி, இத்தேர்தலில் கழக வேட்பாளர் முரசொலி மாறன் பெற்றுள்ள வெற்றி, அறிஞர் அண்ணா அவர்களின் பலத்தை—அரசியல் செல்வாக்கை—தமிழ்மக்கள் வைத்துள்ள வரை கடந்த நம்பிக்கையை, ஐயத்திற்குத் துளியும் இடம்வைக்காமல் உறுதி செய்துவிட்டது.

—கா. க.

## 'இந்தியை எதிர்த்து முழுமூச்சுடன் பணியாற்றுவேன்'—மாறன் சூளுரை

"இந்தித் திணிப்பை எதிர்த்து, நாடாளு மன்றத்தில் ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், பிற இந்தி பேசாத மாநில உறுப்பினர்களும் போராடி வருகிறார்கள்; தி.மு.க. உறுப்பினர்களுடன் சேர்ந்து நானும் இந்தித் திணிப்பை எதிர்த்து முழுமூச்சாகப் போராடுவேன்; ஆங்கிலம் நீடிக்கும் வகையில் அரசியல் சட்டம் திருத்தப்படும் வரை நான் ஓய மாட்டேன்"

என்று, தென் சென்னை நாடாளு மன்றத் தொகுதி வெற்றிவீரர் முரசொலி மாறன், யூ.பி எஸ். சிறப்புச் செய்தியாளரிடம் கூறினார்.

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளும் திட்டங்களும், மக்கள் நன்கு அறிந்ததே; அதற்கு ஏற்ப, நாடாளு மன்றத்தில் நான் செயலாற்றுவேன்" என்றும் அவர் சொன்னார்.

## ஒற்றுமை குலையும்—கல்வியின் தரம் தாழ்ந்துவிடும்!

"மத்திய அரசின் மொழிக் கொள்கை நாட்டிற்குத் தீமை பயப்பதாக உள்ளது; இதனால் நாட்டு ஒற்றுமை குலைந்துவிடும்; இது, கல்வியின் தரத்தைத் தாழ்த்திவிடும்; புதுமைச் சமுதாயம் தோன்றுவதைத் தடுத்து நிறுத்திவிடும்"

என்று எச்சரிக்கை செய்தும்,

"ஆங்கிலம் இந்தியாவின் மொழிகளில் ஒன்றாகவும், கணிசமான தொகையினரின் தாய் மொழியாகவும் ஆகிவிட்டது; எனவே, அவர்களுக்கு அநீதி ஏற்படாவண்ணம், அரசியல் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் ஆங்கிலத்திற்குரிய இடம் தரப்பட வேண்டும்"

என்று பரிந்துரைத்தும்,

நாகபுரியில் கூடிய இந்திய கிறித்துவ யூனியனின் செயற்குழு, தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளது.

## வினோதக்கூற்று—விசித்திரத் தீர்மானங்கள்

"இந்தி ஒன்றினால்மட்டுமே இந்தியாவின் இணைப்பு மொழியாக இருந்து நம்முடைய தேவைகளை நிறைவேற்றி வைக்கமுடியும்; எனவே, நாட்டில் ஒருமைப்பாட்டுணர்ச்சியைக் கொண்டு வருவதற்காக, அதனை எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவில் வளர்த்தாக வேண்டும்."

"மைசூர் மாநிலத்தில் உருதுப் பள்ளிகளைப் பார்த்துக்கொள்வதற்காகத் தனியாகக் கல்வியதிகாரிகளை அமர்த்தும் முறை நீக்கப்பட வேண்டும்."

"தீண்டாமை ஒழிப்புப் பணியைத் தீவிரப்படுத்துவதற்காகப் பல்வேறு மடங்களின் தலைவர்களுடைய ஆதரவினையும் உதவியினையும் கோரிப் பெறவேண்டும்"

என்பன போன்ற தீர்மானங்களை, கருநாடக மாநில காந்தியார் நூற்றுண்டு விழாக் குழு நிறைவேற்றியுள்ளது.

## இந்தியில் படித்தாலும் பட்டம் ஆங்கிலத்தில்தான்!

லக்னோ, நவ. 13—

லக்னோ பல்கலைக்கழகப் பட்டப் படிப்புக்கான பயிற்றுமொழி இந்தியாக இருந்துவந்த போதிலும், அப்பல்கலைக்கழகம் வழங்கும் பட்டச் சான்றிதழ்கள் ஆங்கிலத்தில்தான் அச்சிடப்பட்டிருக்கும் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

"பட்டச் சான்றிதழ்களை இந்தியில் வழங்கினால், அப்பல்கலைக்கழகத்தின் மாணவர்கள், மேல் படிப்புக்கு மற்றப் பல்கலைக்கழகங்களில் சேருவது கடினமாக இருக்கும்" என்று பல்கலைக்கழக அதிகாரி ஒருவர் கூறினார்.

• பட்டம்—சான்றிதழ்கள் ஆங்கிலத்தில் அச்சடிக்கப்பட்டிருந்தால், அவற்றைப் பட்டமளிப்பு விழாப் பந்தலிலேயே எரிக்கப் போவதாக மாணவர்களில் சிலர் இவ்வாண்டு மிரட்டல் விடுத்திருந்தனர்.

## இந்தியஅரசில்காங்கிரசல்லாதஆட்சி

## 'அண்ணா தலைமையமைச்சராக வரவேண்டும்'—பீகார் பி. சோ. கட்சி அமைச்சர் ஆசை

சென்னை, நவ. 11—

திரு. அண்ணாதுரை தமிழக அரசியலுடன் நின்றுவிடலாகாது; நாடு முழுவதிலும் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அவர் பாடுபட வேண்டும்; இதற்காக அவர் தமிழகத்திலிருந்து வெளியே வரவேண்டும்.

"நாடு முழுவதிலுமுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் போராட திரு. அண்ணாதுரை முன்வந்தால் இந்தியாவில் முதலாவது காங்கிரசல்லாத அரசின் தலைமையமைச்சராக அவர் வர முடியும்"

என்று, பீகார் உள்ளாட்சித்துறை அமைச்சரும் சட்டமன்ற பி. சோ. கட்சித் தலைவருமான திரு. போலா பிரசாத் சிங் கருத்தறிவித்தார்.

"டாக்டர் லோகியாவின் மறைவால் ஏற்பட்டுள்ள காலி இடத்தை திரு. அண்ணாதுரை நிறைவு செய்யமுடியும்" என்றும் அவர் கூறினார்.

செய்தியாளரிடம் அவர் மேலும் கூறியதாவது:—

"காங்கிரசல்லாத அரசுகளை ஒழிக்க மத்திய அரசு முயற்சி செய்கிறது; எனவே, பல மாநிலங்களில் உள்ள காங்கிரசல்லாத மாநிலங்களுடன் நெருங்கி ஒத்துழைத்துத் தோழமையுணர்ச்சியுடன் தமிழக முதலமைச்சர் திரு. அண்ணாதுரை அவர்கள் செயல்படவேண்டும்.

"தமிழ் நாட்டில் தி. மு. கழகத்துக்குப் முழுப் பெரும்பான்மை இருக்கலாம்; ஆனால் காங்கிரசல்லாத அரசுகளையெல்லாம் தீர்த்துக்கட்டும் முயற்சியில் மத்திய அரசு வெற்றி பெறுமானால் தி. மு. க. ஆட்சி மட்டும் காங்கிரசல்லாத ஒரே அரசாக இந்த நாட்டில் நிலைக்க முடியாது.

"தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் உயர்வுக்காக தி. மு. க. தலைவர் திரு. அண்ணாதுரை பாடுபட வேண்டும். தாழ்த்தப்பட்டோருக்கும், ஏனைய பின்தங்கியவர்களுக்கும் வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் சிறப்பான வாய்ப்புக்களை அளிக்க வேண்டும். இருபதாண்டுக் காங்கிரசு ஆட்சி, அவர்களின் நிலையை உயர்த்தவில்லை!"

## காங்கிரசல்லாத ஆட்சியைக் கவிழ்க்கச் சதி!

## டில்லி அரசு முயற்சிக்கு கண்டனம்

இலட்சுமணபுரி, நவ. 13—

"மேற்கு வங்காளத்தைப் பொறுத்தமட்டில் மத்திய அரசு மேற்கொண்டுள்ள சதித் திட்டத்தை, நாட்டிலுள்ள முற்போக்குச் சக்திகள் அனைத்தும் கண்டிக்க வேண்டும்"

என்று நாடாளுமன்ற உறுப்பினரும், தொழிலாளர் தலைவருமான எஸ்.எம். பானர்ஜி கேட்டுக்கொண்டிருக்கிறார்; மேலும் அவர் கூறியிருப்பதாவது:—

"மேற்கு வங்கக் கூட்டணி அரசாங்கத்தை மட்டுமன்றி, பல்வேறு மாநிலங்களிலுள்ள காங்கிரசு அல்லாத அமைச்சரவைகளையும் கவிழ்க்க, மத்திய அரசு சதி செய்துவருகிறது; முதலமைச்சரின் இராஜினமா அச்சுறுத்தலுக்குப் பின்னர், உணவு அமைச்சர் இராஜினமா செய்யும்படியாகத் தூண்டியிருக்கிறார்கள்.

"ஐக்கிய முன்னணி அரசைக் கவிழ்க்க, மத்திய அரசு முயற்சி செய்துவருவதை மேற்கு வங்க மக்கள் அனைவரும் அறிவார்கள்; மத்திய அரசின் முயற்சியை முழுமூச்சாக அவர்கள் எதிர்ப்பார்கள்.

"ஐக்கிய முன்னணி அரசைக் கவிழ்க்க, மத்திய அரசு எதுவும் செய்யாது — என்று தலைமை அமைச்சர் இந்திரா காந்தி கூறிய உறுதிமொழியில் மேற்கு வங்க மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டார்கள்."

காங்கிரசுத் தலைவர் தேர்தல்:

## இரகசிய கூட்டம் நடத்த காமராசர் ஏற்பாடு

புதுடில்லி, நவ. 13—

காங்கிரசு மேலிடத்தின் அடுத்த கூட்டத்திற்குத் தனி அழைப்பின் பேரில் யாரும் அழைக்கப்படமாட்டார்கள். நவம்பர் 16-ம் நாள் காங்கிரசுச் செயற்குழுக் கூட்டத்தில், குழுவின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும், நியமன உறுப்பினர்களும் மட்டும் கலந்துகொள்வார்கள.

காமராசருக்கு அடுத்தபடியாக காங்கிரசுக் கட்சிக்குப் புதிய தலைவராக யாரைத் தேர்ந்தெடுப்பது என்பதைக் காங்கிரசு மேலிடம் ஆலோசிக்கும்.

இந்த முக்கியமான கூட்டத்திற்கு முன்னாள் தலைவர் தேபர், கே. டி. மாளவியா, சி. பி. குப்தா ஆகிய பார்வையாளர்களை அழைக்க வேண்டியதில்லை — என்று காமராசர், காங்கிரசு அலுவலகத்திற்கு உத்தரவிட்டிருக்கிறார்.

செயற்குழுக் கூட்டத்தில் தேபர், கே. டி. மாளவியா ஆகியோர் கலந்துகொள்வதை தேசாய் விரும்பவில்லை; இன்னும் சிலரும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுவதை 'சிண்டிகேட்' தலைவர்கள் விரும்பவில்லை; ஆனால் ஜி. எல். நந்தா, சி. சுப்பிரமணியம் ஆகியோர், காங்கிரசு செயற்குழுவில் கலந்துகொள்ளவதை இவாகள் தடுக்க முடியாது; ஏனெனில், இவர்கள் செயற்குழு உறுப்பினர்கள்.

## ஆங்கில மொழி சட்டத்தில் மும்மொழித் திட்டமா?

## டெல்லியின் யோசனைக்கு மாநிலங்கள் எதிர்ப்பு

புதுடில்லி, நவ. 12—

கல்வி போதனைக்கான மும்மொழித் திட்டத்தை, ஆட்சி மொழிச் சட்டத்தில் இணைக்க உள்துறை அமைச்சகம் கூறியுள்ள யோசனையைப் பல்வேறு மாநிலங்களும், நாடாளு மன்றத்தில் பல பிரிவினரும் ஆதரிக்கவில்லை!

"ஆட்சி மொழியும், கல்வி மொழியும் முற்றிலும் மாறுபட்டவை; ஒரே சட்டத்தில் இரண்டையும் இணைக்கலாகாது" என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

தமிழக அரசு ஏற்கனவே மும்மொழித் திட்டத்தைப் புறக்கணித்துவிட்டது. பல இந்தி மாநிலங்களும் மும்மொழித் திட்டத்தைச் செயலாக்குவதில் அவ்வளவு உற்சாகமாக இல்லை.

காங்கிரசார் கவனத்துக்கு:

# 'மாற்றுக் கட்சி ஆட்சிகள் நாட்டு ஒற்றுமைக்குத் தடையல்ல'

## குடியரசுத் தலைவர் கருத்து

"நல்ல நோக்கமும், பொறுப்புள்ள தன்மையும் இருக்கும் வரையில், மாற்றுக் கட்சிகளின் நிர்வாகங்கள் மத்திய அரசிலும், மாநிலங்களிலும் இருப்பது பற்றி அச்சமோ பீதியோ அடையத் தேவையில்லை"

என்று, கவர்னர்கள் மாநாட்டினை நேற்று முன்தினம் புடிதுல்லியில் துவக்கிவைத்துப் பேசுகையில், குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் குறிப்பிட்டிருக்கிறார்.

"அரசியல் சட்டத்தில் கூட்டு ஆட்சிமுறையை அடிப்படையாகக்கொண்டிருக்கும் இந்தியா போன்ற நாடுகளில், இதுபோல் அமைவது இயற்கைதான்" எனவும் அவர் கூறியிருக்கிறார்.

# தியாகராயர் கல்லூரி தமிழ் மாணவர் மன்றம்

## அண்ணா, பாரதிதாசன் உருவப்படம் திறக்கமுடிவு

வண்ணை சர். தியாகராயர் கல்லூரியின் தமிழ் மாணவர் மன்றச் செயற்குழு கூடி, பேரறிஞர் அண்ணா அவர்களின் உருவப் படத்தினையும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் உருவப் படத்தினையும் திறப்பதென முடிவு செய்தது.

அண்ணா அவர்களின் உருவப் படத்தினை, புரட்சி நடிகர் எம். ஜி ஆர். அவர்களைக்கொண்டும், புரட்சிக் கவிஞரின் படத்தினைப் பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்களைக்கொண்டும் திறப்பதென முடிவுசெய்து கருணாநிதி அவர்களையும், எம். ஜி. ஆர். அவர்களையும் அணுகிக் கேட்டபோது இருவரும் வருகைதர இசைந்துள்ளனர். திறப்பு விழாவினை டிசம்பர் திங்கள் 10-ம் நாளுக்குள் நடத்திவிடுவதென முடிவு செய்யப்பட்டது.

"விழாவின் தொடக்கத்தில் இசைச் சித்தர் சிதம்பரம் எஸ். ஜெயராமன் அவர்களின் இன்னிசை விருந்தும், விழா முடிவில் கலைச்செல்வி சந்திரகாந்தாவின் 'பொன்னியின் செல்வி' நாட்டிய நாடகமும் நடத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது" என்று மாணவர் மன்றத் தலைவர் அறிவிக்கிறார்.

## சென்னை மாணவர் மன்றம்

29—10—67-ல் நடைபெற்ற சென்னை மாணவர் மன்றப் பேரவையில், கீழே குறிப்பிடப்பட்டவர்கள் 1967—68 ஆண்டுக்குரிய ஆட்சிக் குழுவினராக முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்:—தலைவர்: மயிலை சிவமுத்து; துணைத் தலைவர்கள்: ந. சண்முகம், க. சிவசிதம்பரம், நா. சீநிவாச முதலியார்; செயலாளர்கள்: தணிகை. உலகநாதன், அன்பு கணபதி; பொருளாளர்: வல்லை. பாலசுப்பிரமணியம் பி.ஏ.; துணைப் பொருளாளர்: இரா. சீனிவாசன் பிஎஸ்சி; தேர்வுக் குழுத் தலைவர்: கோ. வில்வபதி; தேர்வுக் குழுச் செயலாளர்: மி.ச. நடேசன்; உறுப்பினர்கள்: மா. ரா. வஞ்சிக்கோவன், மணி. கோபாலகிருஷ்ணன், மயிலை. சிவ. சண்முகசுந்தரம், த. இராமலிங்கம், ப. கி. பொன்னுசாமி, எஸ். சேஷாசலம், து. வேணுகோபால் பி.ஏ., திருமதி வ. பா. தாமரைக்கண்ணி, சிவ. சிவராமலிங்கம் எம்.ஏ., கோ. சக்கரபாணி, க. அரசுமணி, வி. இளங்கோ பி.ஈ., இர. திருஞானசம்பந்தம், ஏ. விநாயகசுந்தரம், செ. கலைச்செல்வி.

# இந்திரா காந்தி மாஸ்கோ சென்றதேன்?

## நாடாளுமன்றக் கூட்டத்தில் தகவல் வெளியாகும்

புதுடில்லி, நவ. 13—

இந்தியாவின் அக்டோபர் புரட்சி பொன் விழாவில் கலந்துகொள்ளத் தலைமை அமைச்சர் இந்திரா அவசர அவசரமாக மாஸ்கோவுக்குப் போய்த் திரும்பியது குறித்து இங்கு அரசியல் வட்டாரத்தில் மாறுபட்ட கருத்துக்கள் கூறப்படுகின்றன.

நாடாளுமன்றத்தின் இரு சபைகளும் கூடும்போது, இந்திராவின் மாஸ்கோ பயணத்தின் மர்மம் பற்றி இன்னும் சில தகவல்கள் கிடைக்குமெனத் தெரிகிறது.

கம்யூனிஸ்டு அல்லாத அரசாங்கங்களின் தலைவர்கட்கு அழைப்பு விடுக்கும் எண்ணம், இரஷ்யாவுக்குக் கிடையாது; ஆனால் இந்திரா காந்தி, அழைப்பு வரச் செய்து மாஸ்கோவுக்குப் போயிருக்கிறார்!

பாகிஸ்தானுக்கு இரஷ்யா ஆயுதங்களை விற்று வருகிறது; இதைத் தடுக்கும் எண்ணத்துடன் இந்திரா காந்தி சென்றதாகச் சொல்லப்படுகிறது.

அத்துடன், 'மத்திய அரசில் காங்கிரசல்லாத அமைச்சரவை ஏற்பட வேண்டும்' என்று வலது சாரி கம்யூனிஸ்டுகளும் பகிரங்கமாகத் தெரிவிக்க வருகிறார்கள்; இது, இந்திரா காந்திக்கு கவலையைத் தந்துள்ளது.

'சோஷலிச சமுதாயம் ஏற்படுத்துவதில் இந்திய அரசுக்கு அக்கறை உண்டு' என்பதை காட்டவே இந்திரா காந்தி, மாஸ்கோ சென்றதாகவும் சொல்லப்படுகிறது.

# திருத்துறைப்பூண்டி வட்ட தி. மு. கழகம்

3—11—67 அன்று திருத்துறைப்பூண்டியில் அவைத் தலைவர் கு. சண்முகம் தலைமையில் நடைபெற்ற திருத்துறைப்பூண்டி வட்ட தி. மு. க. கூட்டத்தில், வட்டச் செயலாளரின் விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கழகத் தேர்தல் வரையில் வட்டத் துணைச் செயலாளர் கரியாபட்டினம் இரா. சங்கரன், வட்டக் கழகப் பொறுப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

உறுப்பினர் சேர்த்தல், கழகத் தோழரின் கடமை ஆகியவைகளைப் பற்றி திரு. ந. தருமலிங்கம் எம்.எல்.ஏ. பேசினார்.

திரு. இரா. சங்கரன் நன்றி நவின்றார்.


# ஒருபந்தூர் அண்ணா மன்றம்

25—10—67 அன்று கபிலர்மலை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சி. வே. வேலப்பன், அண்ணா மன்றத்தைத் திறந்துவைத்தார்.

மோகனூர் கிளைக் கழகச் செயலாளர் கே. எஸ். இராதாகிருட்டினன் கொடியேற்றி வைத்தார்.

மன்றத்தின் அவைத் தலைவராக கே. நமசிவாயம்; செயலாளராக ஜே. டபிள்யு. சாமுவேல்; துணைச் செயலாளராக ம. பழனியப்பன்; பொருளாளராக நா. காசிலிங்கம் ஆகியோரும், செயற்குழு உறுப்பினர்களாக அமாவாசை, பெ. சின்னுசாமி, பெ. மணி, எம். எஸ். பெரியசாமி, பி. செல்லப்பன், எஸ். சுப்பிரமணியம், செ. பெருமாள் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



# "டிவிஎஸ்ஸில் ரீடிரெடிங் செய்ததால் டயர் அதிக மைல் உழைத்தது"






"நான் ஒரு முறை டிவிஎஸ்ஸில் ரீடிரெடிங் செய்தேன். அது முதல் நான் வேறுயாரிடமும் சென்றதில்லை. டிவிஎஸ் ரீடிரெடிங் மிகவும் சிறந்தது. அதனால் டயருக்காக முன்னால் செலவு பாதிக்குமேல் குறைகிறது."

**உங்கள் டயர்களை டிவிஎஸ்ஸில் விஞ்ஞான ரீதியில் ரீடிரெடிங் செய்து நடைமுறைச் செலவைக் குறையுங்கள்**



TVS

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்
தொழிற்சாலைகள்: பங்களூர் - கோயமுத்தூர் - மதராஸ்
புதுக்கோட்டை - செகந்திராபாத் - திருநெல்வேலி
si-4193

# தேவரும் மூவரும்!

"இப்போது, சாதாரணத் தெருச் சண்டைக்கும்கூட, 'சட்டம் போச்சு—அமைதி போச்சு' என்று கதறுவோர், அன்றையத் தினம் முதுகுளத்தூர் சீமையில் எத்தனை அக்கிரமங்கள் நடைபெற்றன—எத்தனை பேர் விதவைகளாக்கப்பட்டனர்—வாலிபர்கள் மட்டுமல்லாது பிஞ்சுக் குழந்தைகள் சுடப்பட்டனரே—அப்போது சட்டம் எங்கே சென்றது—ஒழுங்கு எங்கே போய் ஒளிந்து கொண்டது ?—என்பதற்கெல்லாம் பதில் கூறட்டும்!

"முத்துராமலிங்கத் தேவர், காங்கிரசைக் கட்டி வளர்த்தார் ; எனினும், கடைசிக் காலத்தில் அவர் காங்கிரசைவிட்டு வெளியேறினர்; அவர் மட்டுமா—பலரும் வெளியேறினர் !

"இப்போது காங்கிரசு மாநாடு நடைபெற்ற அதே ஜபல்பூரில்தான், அன்று நேதாஜி வெளியேறினர்! இன்று அந்த ஜபல்பூரில்தான், காங்கிரசில் மிச்சம் மீதியிருந்த ;சனநாயகமும் வெளியேறியது !

"ஆலயத்திலிருந்து தெய்வங்கள் எல்லாம் வெளியேறின! இப்போது அங்கே வௌவால்கள் குடியேறிக் கொண்டிருக்கின்றன ! ஒளிமயமான ஆலயம், இன்று இருட்டு மண்டபமாய் ஆகிவிட்டது ! இந்த இருட்டு மண்டபத்தில் வௌவால்கள் சிறகடித்து—மிரட்டல் ஒலியைக் கிளப்பிக்கொண்டிருக்கின்றன !

"வௌவால்களின் மிரட்டல் கிளம்பும் இந்த நேரத்தில் தேவருக்கு இருந்த வீரமும், நெஞ்சழுத்தமும், நேர்மைப் போக்கும் நமக்குத் தேவை !

"அனைத்தையும் அமைதியாக ஆராய்ந்து—ஆழ்ந்து சிந்தித்து—ஆனல் வீரமிக்க ஆண் மகனுகச் செயல்படும் பக்குவத்தை, தேவர் வாழ்விலிருந்து நாம் இப்போது பெற்ருக வேண்டும் !

"இன்று அந்தத் தேவர் இல்லாமல் இருக்கலாம் ; ஆனல் மூவர் இருக்கிறர்கள் ! அந்த மூவர் யார் எனக் கூறத் தேவையில்லை ! இராஜாஜி—காயிதே மில்லத்—பெரியார் வழிவந்த பேரறிஞர் அண்ணு—இந்த மூவர் உள்ளத்திலும், எண்ணத்திலும் தேவர் இருக்கிறர் ! அவருக்கு என்றும் அழிவில்லை !"

--அமைச்சர் மு. கருணநிதி

(முத்துராமலிங்கனர் நினைவு நாள் கூட்டத்தில்)

அமைச்சர்

# கருணநிதி உடல்நிலை

சென்னை, நவ. 12—
கார் விபத்திற்குப்பின் ஓய்விலிருந்த பொதுப்பணி அமைச்சர் மு. கருணநிதி அவர்கள், இடையிலே தேர்தல் பணிகளில் கலந்துகொண்டதால் மீண்டும், இடது கண்ணில் சிறிது வலி ஏற்பட்டுள்ளது.

இன்று மதியம், சென்னை கண் மருத்துவமனையில் அவருக்கு சிகிச்சை அளித்த டாக்டர், சிறிது நாட்களுக்கு வெளியூர் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளக்கூடாது ; பார்வையாளர்களைக் காண்பது — கூட்டங்களில் அதிக நேரம் பேசுவது போன்றவற்றைக் குறைத்துக் கொள்ள வேண்டும்' என்றும் கூறியுள்ளார்.

வெளிச்சத்தைப் பார்க்கக் கூடாது என்பதற்காக இப்போது அமைச்சர் கருணநிதி, கறுப்புக் கண்ணடி அணிந்துள்ளார்.

உடல்நிலை காரணமாக இன்று வேலூர் பயணத்தை ரத்து செய்யவேண்டியதாயிற்று.

"நவ. 17-ம் நாள் கடலூர் சீரணி விழாவிலும், நவ. 19-ம் நாள் திருவாரூர் நிகழ்ச்சியிலும் கலந்துகொள்வது உறுதி செய்யப்படவில்லை" என்று அறிவிக்கப்படுகிறது.

எங்கும் விற்பனையாகிறது !

'காஞ்சி' [நிறுவனர் : அறிஞர் அண்ணு]

மூன்ரும் ஆண்டு மலர்

அறிஞர் அண்ணு
அவர்கள் அளித்திடும்

★ 'கனியும் மலரும்' — [தம்பிக்கு மடல்]
★ 'அவளால் அவர்' — [நாடகம்]
★ 'உங்களை நம்பித்தான் நண்பர்களே!' — [கட்டுரை]
★ 'காந்தி வழி நடப்போம்' — [கட்டுரை]
★ 'பொற்காலம் காண்போம்' — [கட்டுரை]

மற்றும்

மாண்புமிகு அமைச்சர்கள் — முன்னணித் தலைவர்கள் — எழுத்தாளர்கள் — கவிஞர்கள் ஆகியோரின் கருத்துப் படைப்புகள் நிரம்பியது

எங்கும் விற்பனையாகிக்கொண்டிருக்கிறது !

விலை ரூ. 1

விவரங்கட்கு : உரிமையாளர்—'காஞ்சி'—காஞ்சிபுரம்-3

## தென் சென்னை வெற்றி விழா

### கடற்கரையில் மாபெரும் பொதுக்கூட்டம்

தென் சென்னைத் தொகுதி நரடாளுமன்ற இடைத் தேர்தலில் கழக வேட்பாளர் மாறன் பெற்ற மாபெரும் வெற்றியைப் பாராட்ட சென்னை மாவட்ட தி. மு. க. சார்பில் 15—11—67 அன்று சென்னை--திருவல்லிக்கேணி கடற்கரையில் மாபெரும் பாராட்டுவிழாப் பொதுக்கூட்டம் நடைபெறும்.

மாவட்டச் செயலாளர் நீலநாராயணன், விழாவிற்குத் தலைமைவகிப்பார்.

முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்களும், மற்றும் அமைச்சர்கள், கழகக் கலைஞர்கள், கழக முன்னணியினர் அனைவரும் பேசுவர்.

இந்த விழாவின்போது, ஏற்கனவே அறிவித்திருந்தபடி அதிக வாக்குகள்பெற்ற வட்டங்களுக்கு மாவட்டக் கழகச் சார்பிலும், தலைமைக் கழகச் சார்பிலும் அளிக்கும் பரிசுகள், அன்று அறிஞர் அண்ணு அவர்கள் மூலம் அந்தந்த வட்டங்களுக்குத் தரப்படும்.

## காஷ்மீரில் இயேசு கிறிஸ்து!

### பைபிளையே மாற்றுகிருர் பாகிஸ்தான் நீதிபதி

ஜபருல்லாகான் என்னும் பாகிஸ்தானைச் சேர்ந்த உலக நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவர், இயேசு பற்றிப் புதிய தகவல் ஒன்றைத் தந்துள்ளார் !

"சிலுவையில் அறையப்பட்ட இயேசு, மயக்கமுற்று—பின்னர் நினைவு வந்தபின், பாலஸ்தீனத்திலிருந்து காஷ்மீருக்கு அனுப்பப்பட்டு — அதற்கும் பின்னல் ஸ்ரீநகரில் புதைக்கப்பட்டார்"

என அவர் கூறியிருக்கிருர் !

இச்செய்தி, புதுடில்லி ஆங்கில நாளிதழ் 'பேட் ரியட்'டில் வெளியாகியிருக்கிறது.

## நடக்க இருப்பவை

### 14--11--67

**பழனி**

அண்ணு மறுமலர்ச்சி மன்றச் சார்பில் தென் சென்னை வெற்றி விழா ; இரவு 7-மணிக்கு நேரு திடலில் ; தலைவர் : ஆர். சாமிராசு ; பேசுபவர் : ஆ. திராவிட மணி.

### 15--11--67

**ஈரோடு**

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு சூரம்பட்டி நால் ரோட்டில் ; தலைவர் : எஸ். இராமலிங்கம் ; பேசுவோர் : சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., மு. சின்னசாமி எம்.எல்,ஏ., ப. ச. விசுவநாதன், மா. சுப்பிரமணியம் பி.ஏ. பி.எல் , எம். இராமசாமி, டாக்டர் சேதுபாஸ்கரன், ஈ. ஆர். குமாரசாமி, ஏ. என். சாமி, கு. குமாரசாமி.

**செங்கம்**

தி. மு. க., முஸ்லிம் லீக் சார்பில் இரவு 7-மணிக்கு சிவன் கோயில் திடலில் ; தலைவர் : வெ. வரதன் ; பேசுவோர் : அமைச்சர் சாதிக்பாட்சா, அரூர் முத்து எம்.பி., தி. கே. சின்னராசு எம்.எல்.ஏ., பி. எஸ். சந்தானம் எம்.எல்.ஏ., கே. வி. குப்புசாமி, செ. அரங்கநாதன், எம். எஸ். இராதாகிருட்டினன், அ. ந. அரங்கநாதன், சி. இராமலிங்கம், ஜே. ஏ. ஜப்பார், டி. அப்துல் சத்தார், து. கண்ணன், சி. சின்னராசு.

## ம. பொ. சி. உடல்நிலை

### அண்ணு பார்த்தார்

சென்னை, நவ. 11—
வயிற்றுவலி காரணமாக சென்னை மருத்துவமனையில சிகிச்சை பெற்றுவரும் தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் அவர்களை, முதலமைச்சர் அறிஞர் அண்ணு சந்தித்து, உடல் நலம்,பற்றி விசாரித்தார் !

இன்னும் 15 நாட்கள் அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவார்.

"ஒரு மாதம் அவர் முழுமையாக ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டும்" என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர் ; எனவே, இன்னும் ஒரு மாதம்வரை அவர் ஓய்வு எடுத்துக்கொள்வார்.

## தோல்வி கண்ட காங்கிரசார்

# சுமத்தும் பழி!

"பொதுவாகத் தேர்தல் தோல்விக்குப் பிறகு வாக்காளர்களைப் பழி கூறுவதே காங்கிரசு நண்பர்களுக்கு வழக்கமாகிவிட்டது !

"'விஷக் கிருமி பரவிவிட்டது' என்றும், 'போதையில் வாக்களித்தார்கள்' என்றும் சென்ற முறை பழி கூறியவர்கள்தாம், அதே முறையில் இந்தத் தடவை :குடிசைவாழ் ஏழைகள், மிரட்டலுக்குப் பயந்து மனச்சாட்சிக்கு விரோதமாக வாக்களித்திருக்கிருர்கள்' என்று அவதூறு கூறுகிருர்கள் !

"குடிசைவாழ் மக்கள் ஏழைகளாக இருக்கலாம் ; ஆனல் அவர்கள் மனச்சாட்சியை விற்பவர்கள் அல்லர் !

"அவர்கள் பயப்படுவது, 'குடிசைக்குத் தீ வைக்கும் கொடுமை' ஒன்றுக்குத்தானே தவிர, 'வேறு எதற்கும் அல்ல' என்பதை, குடிசைவாழ் மக்கள் சார்பாகக் கூறிக்கொள்கிறேன்"

என்று, முரசொலி மாறன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் ; தென் சென்னை இடைத் தேர்தலில் தோற்ற காங்கிரசு வேட்பாளர் சி. ஆர். இராமசாமி விடுத்த அறிக்கையில் சில ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களையும், அவதூறுகளையும் கிளப்பியதற்கு அவர் தமது அறிக்கையில் பதிலளித்திருக்கிருர்.

## யார் இந்த பாட்டீல்....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தெளிந்த குட்டையில் மீன் பிடிக்கும் நேர்மை அவருக்கு ஒத்துவராத ஒரு வழக்கம் ! அது இப்போதைய காங்கிரசின் நிலைமைகளுக்குப் பெரிதும் ஒத்துவருவதாக இருப்பது, அவர் பெற்றிருக்கும் அரசியல் அதிர்ஷ்டம் !

தான் எடுத்த காரியத்தினை வெற்றிகரமாக முடிக்க முடியாவிட்டாலும், அதன்மூலம் ,விஷம'ங்களை—விரும்பும் 'விளைவு'களை ஏற்படுத்துவதில் ஒரு சமர்த்தர், எஸ். கே. பாட்டீல் !

உண்மையிலேயே, போட்டியில் பாட்டீல் வெற்றிபெற முடியாவிட்டாலும், போட்டி நடைபெறுவதன் மூலம் கட்சிக்கும்—மத்திய அமைச்சரவைக்கும் பெருத்த 'தலைவலி'யை உண்டாக்கும் 'திறமை' பெற்றவர் பாட்டீல் !

**காமராசர் விரும்புவது இதனைத்தான் !**

'பெருந்தன்மையாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுவார்' என்பதனைத் தவிர, இந்திராவின் வேட்பாளர் நந்தாவுக்கு, அனைத்திந்திய மட்டத்தில் பக்கபலமோ பின்பற்றுதலோ கிடையாது.

ஆனலும், அதற்காகப் பாட்டீல் தலைவராக வந்துவிடுவதனைப் பார்த்துக்கொண்டிருக்க சேகசீவன்ராம், சவாண், மொரார்ஜி தேசாய் ஆகிய அமைச்சரவைப் பிரிவினர் தயாராக இருக்க மாட்டார்கள் ! இது, ஓர் உள்நிலை !

இந்த நிலையில் பாட்டீல், 'நானும் போட்டியிடுகிறேன்' என்று கூறுவதுதான் உண்மையாக இருக்க முடியுமா ? அல்லது 'அவர் வெற்றிபெற்றுவிடுவார்' என்று எதிர்பார்ப்பதுதான் ஒரு யூகமாக இருக்க முடியுமா ? இரண்டுமே சாத்தியக்கூருக இல்லை !

அப்படியானல், யார் இந்தப் பாட்டீல் ? ஏன் இந்தப் பாட்டீல் ?—என்ற கேள்விகள் தோன்றத்தான் செய்யும் !

இதற்கான விளக்கங்களை மேற்கொண்டு வெளியாகும் நிலைமைகளையொட்டி அவ்வப் போது பார்க்கலாம்.

—எஸ். ஆர்.

## கல்வெட்டுச் சொற்பொழிவு

திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி சார்பில் 14—11—67 மாலை 6-15 மணிக்கு ஈரோடு புலவர் செ. இராசு அவர்களின் 'கல்வெட்டின் வரலாறு' பற்றிச் சிறப்புச் சொற்பொழிவு, திரு. மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் தலைமையில், மண்ணடி—பவழக்காரத் தெரு, ஏ. ஆர். சி. மகளிர் பள்ளியில் நடைபெறும்.

## 'தீ'யவர்கள் கைவரிசை ஓயவில்லை!

சென்னை நவ 12—
சென்னை நகரில், நான்காவது நாளாக இன்றும் குடிசைப் பகுதிகளில் தீ விபத்துக்கள் ஏற்பட்டன.

இன்று காலை அடையாறு சாஸ்திரி நகரில் ஒரு குடிசையும், மாலை மயிலாப்பூர் நாராயணசாமி தோட்டத்தில் ஒரு குடிசையும் தீப்பற்றிக் கொண்டன. தீ விபத்துக்கான காரணம் தெரியவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி, அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] அச்சகத்தில் (24, [illegible] [illegible] தெரு சென்னை[illegible]) [illegible]